

தலைமைச் செயலகத்தில், நேற்று (31.01.2024) நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆகியோர் தலைமையில் வேளாண்மை தனி நிதிநிலை அறிக்கை 2024–2025 ஆம் ஆண்டிற்கான கருத்து கேட்பு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கூட்டுறவுத் துறை அமைச்சர், கே.ஆர்.பெரியகருப்பன், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, மீன்வளம்– மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே.கோபால், நிதித் துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மை உழவர் நலத்துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக துணை வேந்தர் டாக்டர்.கீதாலட்சுமி, நிதித் துறை அரசு கூடுதல் செயலாளர் ஜி.கே.அருண் சுந்தர் தயாளன், துறைத் தலைவர்கள், சிறப்பு பிரதிநிதிகள், விவசாயிகள் சங்க பிரதிநிதிகள், தமிழ்நாடு விவசாய இடுபொருள் விற்பனையாளர்கள் சங்கம், வேளாண் வணிகர்கள், வேளாண் ஏற்றுமதியாளர்கள், உழவர் உற்பத்தியாளர் குழு பிரதிநிதிகள், உணவு பதப்படுத்தும் நிறுவனங்கள், உணவுப்பொருட்களில் நுண்ணுயிரியல் பகுப்பாய்வு செய்யும் ஆய்வகங்கள், அரிசி ஆலை உரிமையாளர்கள், முட்டை உற்பத்தியாளர்கள், பால் உற்பத்தியாளர்கள், மீன்வளத்துறை–கடல் சார் மீனவர்கள் மற்றும் உள்நாட்டு மீனவர்கள் கலந்து கொண்டனர்.

தாம்பரம் மாநகரில் திமுக சார்பில்

## அண்ணா சிலைக்கு மாலை!

### எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. அறிக்கை!

சென்னை,பிப்.1–

தாம்பரம் மாநகரக் கழகத்தின் சார்பில் சண்முகம் சாலையில் பாலகிருஷ்ணா துணிக்கடை அருகில் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப்படம் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு மலர் மாலை அணிவித்து வணங்கி, அதன் பின்பு மாநகராட்சி வளாகத்தில் உள்ள அண்ணாவின் திரு உருவ சிலைக்கு எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட உள்ளது.

இந்நிகழ்வில் மாவட்ட மாநகர நிர்வாகிகள், பகுதி கழக, வட்ட கழக செயலாளர், நிர்வாகிகளும் மாநகரில் உள்ள மாவட்ட மாநகர அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்ற இருபால் பிரதிநிதிகள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, மற்றும் அனைத்து அணிகளின் கழகத் தோழர்களும் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதன் தொடர்ச்சியாக காலை 7 மணி அளவில் தலைநகர் சென்னையில் கழகப் பொதுச் செயலாளர் அவர்களின் தலைமையில் நடைபெறும் அமைதிப் பேரணியிலும் நமது மாநகர கழக நிர்வாகிகள் கழகத் தோழர்கள் பெருமளவில் கலந்து கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞரின் 'முரசொலி' காட்டிய வழியில்

# அவதூறுகளை முறியடிக்கும் முன்கள வீரர்களாவீர்!

## இளைஞரணியினருக்கு வேண்டுகோள் விடுத்து – சேலம் மாநாட்டில் கோவி.லெனின் பேச்சு!

சேலம், பிப்.1-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முரசொலி காட்டிய வழியில் அரசியல் எதிரிகள் பரப்பும் அவதூறுகளை முறியடிக்கும் கழகப் படையின் முன்கள வீரர்களாக இளைஞரணியினர் செயல்பட வேண்டும் என இளைஞரணி இரண்டாவது மாநில மாநாட்டில் கழகத் தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர் கோவி.லெனின் பேசினார்.

அவர் பேசியது வருமாறு :

சேலத்தில் இன்றும் சூரியன் உதித்திருக்கிறது. ஆனால் இன்று உதித்த சூரியன் இனி ஒருநாளும் அஸ்தமிக்கவே போவதில்லை என்பதை காட்டக்கூடிய வகையிலே இந்த சேலத்தில் மட்டுமல்ல, மேற்கு மாவட்டங்கள் முழுவதும், தமிழ்நாடு முழுவதுமே இனி உதயசூரியன் தான் நிரந்தரமாக இருக்கப் போகிறது என்பதை நம்முடைய இளம் தலைவர் கூட்டி இருக்கின்ற இந்த இளைஞர் அணியுடைய இரண்டாவது மாநில மாநாடு பறைசாற்றி கொண்டிருக்கிறது.

ஒரு மிக முக்கியமான கட்டத்தில் போர்க்களத்திற்கு வீரர்களைத் தயார் செய்வது போல இந்தியா மிகப்பெரிய அச்சுறுத்தலுக்கு ஆளாகி இருக்கின்ற நேரத்தில், பாசிச மதவெறி சக்திகள் பெரும்பான்மை இந்து மக்கள் உட்பட அனைத்து மத மக்களையும் அச்சுறுத்திக் கொண்டிருக்கின்ற நேரத்தில் அதற்கான போர்க்கள வீரர்களை தயார் செய்கின்ற ஒரு பாசறை அரங்கமாக நடந்து கொண்டிருக்கிறது இந்த இளைஞர் அணியின் மாநில மாநாடு. இந்த மாநாட்டில் ஒவ்வொரு தலைப்பிலும் பேசப்படுகிற பேச்சுகள் அனைத்துமே திராவிட இயக்கத்தின் கொள்கைக் கருவூலங்கள். அந்த வகையிலே ஒவ்வொரு பேச்சாளரும் சொல்கின்ற கருத்துகளை நீங்கள் மனதிலே பதியச் செய்து கொள்கின்றீர்கள்.

இப்படிப்பட்ட ஒரு வாய்ப்பை வழங்கிய கழகத்தினுடைய தலைவர் அவர்களுக்கு நன்றி. முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு அவர்கள் தன்னுடைய திருச்சியில் மட்டுமில்லை, தன்னிடம் சேலத்தை ஒப்படைத்தாலும் ஒரு மகத்தான மாநாட்டை நடத்திக் காட்டுவேன் என்று நிரூபித்துக் காட்டியிருக்கிறார்.

'திராவிட இயக்கமும் பத்திரிகைகளும்' என்ற தலைப்பிலே நான் பேசுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. மற்றவர்களுடைய தலைப்புக்கும் இந்தத் தலைப்புக்கும் ஒரு சின்ன வேறுபாடு உண்டு மற்றவர்களின் கருத்துக்களை எல்லாம் பதிவு செய்யக்கூடிய இடம்தான் பத்திரிகை. இது எனக்கான தலைப்பு மட்டுமல்ல, இங்கே கூடியிருக்கிற இலட்சோப இலட்சம் தொண்டர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிற தலைப்பு. ஏன் என்றால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது எதிரிகள் அவதூறுகளை பரப்புவதும் வதந்திகளை பரப்புவதும் பொய் குற்றச் சாட்டுகளை வைப்பதும் ஒவ்வொரு முறையும் நடந்து கொண்டிருக்கும். தேர்தல் வந்தால் எதையாவது வெட்டி ஒட்டி அவதூறு பரப்பி, நம்மைத் திசை திருப்பக் கூடிய நேரத்தில் அதற்குப் பதில் அளிக்க வேண்டிய கடமை நமக்கு உள்ளது. நான் ஒரு பத்திரிக்கையாளர். ஆனால் இங்கு இருக்கும் நீங்கள் எல்லாம் பத்திரிகையாளர்களா? ஆமாம்.. நீங்களும் பத்திரிக்கையாளர்கள் தான். என்றைக்கு உங்கள் கையில் செல்போன் வந்ததோ அன்றுமுதல் ஒவ்வொரு கழகத் தொண்டனும் பத்திரிக்கையாளர்தான்.

### பத்திரிகை பெயராலேயே அழைக்கப்பட்ட இயக்கம்!

திராவிட இயக்கம் தனக்கு எதிரான பத்திரிகைகள், தனக்கு எதிரான தொலைக் காட்சிகள், தனக்கு எதிரான சமூக வலைத்தளங்கள் இவற்றைக் காலம்தோறும் எதிர் கொண்டு தன் சொந்தப் பணத்தில் பத்திரிகை நடத்தி, தனக்கு எதிரான சூழ்ச்சிகளை முறியடித்து, வெற்றி பெற்ற இயக்கம்.

திராவிட இயக்கத்தின் பத்திரிகை வரலாற்றை எடுத்துக் கொண்டால் முதலில் வருவது நீதிக்கட்சி. அதற்கு வைக்கப்பட்ட பெயர் தென்னிந்திய நல உரிமைச் சங்கம். அது தன்னுடைய கொள்கையை பரப்புவதற்காக 'ஜஸ்டிஸ்' என்ற பத்திரிகையை நடத்தியது. அதனால் ஜஸ்டிஸ் பார்ட்டி என்று மக்கள் சொல்ல ஆரம்பித்தார்கள். அந்த ஜஸ்டிஸ் பார்ட்டி அப்படியே தமிழில் 'நீதிக் கட்சி' என்று அழைக்கப்படுகிறது. ஒரு பத்திரிக்கையே ஓர் இயக்கத்தின் பெயராக மாற முடியும் என்பதை நிரூபித்து காட்டியது திராவிட இயக்கம்.

இயக்கத்தின் செய்தியை எப்படிச் சொல்கிறோம், எப்படிச் சொல்ல வேண்டும், எப்படி மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என்கின்ற தெளிவான ஒரு பாதையை வகுத்த இயக்கம் திராவிட இயக்கம்.

நீதிக்கட்சியை தொடர்ந்து தந்தை பெரியார் தன்னுடைய கருத்தைச் சொல்வதற்கு தன் சொந்த பணத்தை போட்டு குடிஅரசு என்ற பத்திரிகையை ஆரம்பிக்கிறார். அந்த பத்திரிகை ஆரம்பிக்கும் பொழுதே, பகுத்தறிவு கருத்துக்களை சுயமரியாதை கருத்துக்களை மக்களுடைய உரிமைக்கான கருத்துக்களை நான் இதில் சொல்வேன். இதில் நானே எழுதுவேன். நானே அச்சடிப்பேன். யாரும் வாங்கி படிக்காவிட்டாலும் கூட நானே படித்து அந்த கருத்தை பரப்புவேன் என்ற உறுதியோடு அந்த பத்திரிகை அவர் நடத்தினார்.

### தடைகளை எதிர்கொண்ட பெரியாரும் அண்ணாவும்!

இந்த இளைஞரணி மாநாடு என்பது மாநில உரிமை மாநாடு. திராவிட இயக்கம் என்பது மாநில உரிமைக்காகவும் மானுட உரிமைக்காகவும் பாடுபடுகின்ற ஓர் இயக்கம். அந்த வகையிலே குடிஅரசு பத்திரிகை உரிமைகளை எழுப்பியது. அன்றைய வெள்ளைக்கார அரசு தடை செய்கிறது. குடிஅரசு தடை செய்யப்பட்டால் புரட்சி வெடிக்கும். அதுபோல புரட்சி என்கின்ற பத்திரிகையை பெரியார் நடத்துகிறார். குடிஅரசு ஒடுக்கப்பட்டு புரட்சி வெடித்தால் என்ன கிடைக்கும்? மக்களுக்கான விடுதலை கிடைக்கும். அதுதான் விடுதலை என்கின்ற இதழ். உலகத்திலேயே பகுத்தறிவு கருத்துக்களை முன்வைக்கக் கூடிய ஒரு நாளேடு இருக்கிறது என்றால் அது விடுதலை மட்டும்தான்.



பெரியார் இப்படி என்றால்; பேரறிஞர் அண்ணா சும்மா இருப்பாரா? திராவிட நாடு இதழை நடத்தினார். பத்திரிகையின் பெயரே நம்முடைய கொள்கை என்ன, நம் இயக்கத்தின் பாதை எது, நம்முடைய இலட்சியம் என்ன என்பதைச் சொல்லக் கூடிய வகையிலே இருந்தது. இதே திராவிட நாடு குரலை அவர் நாடாளுமன்ற மாநிலங்களவையில் எழுப்பினார். தடை வந்தது. நம்முடைய இயக்கம் இந்த ஜனநாயக உரிமைக்காக குரல் குரல் கொடுக்கும் போதெல்லாம் தடையை எதிர்கொணடது.

குடிஅரசு பத்திரிகையை வெள்ளைக்கார அரசு தடை செய்கிறது. திராவிட நாடு என்ற கோரிக்கையை இந்தியா விடுதலைக்குப் பிறகு அமைந்த பிரதமர் நேரு தலைமையிலான அரசு தடை செய்கிறது. திராவிட நாடு என்கின்ற பத்திரிகையின் பெயர் காஞ்சி என்று மாறுகிறது அது மட்டுமல்ல, தமிழில் சொன்னால் மட்டும் போதாது நம்முடைய கருத்துக்களை ஆங்கிலத்தில் சொல்ல வேண்டும் என்று ஹோம்லேண்டு என்ற பத்திரிகையும் பேரறிஞர் அண்ணா நடத்துகிறார்.

### கழகத்தினர் நடத்திய ஏடுகள்!

அண்ணா மட்டுமா? திராவிட இயக்கத்தின் மற்ற தலைவர்களும் தங்களுடைய கருத்துக்களை தொடர்ந்து வெளியிடுகிறார்கள். அதில் கலைஞர் நடத்திய முரசொலி என்பது இன்று வரை கழகத்தின் போர்வாளாக ஒவ்வொருவர் கையிலும் இருக்கிறது. முரசொலியைப் போலவே திராவிட இயக்கத்தினுடைய ஒவ்வொரு தலைவர்களும் பத்திரிகை நடத்தினார்கள்.

நாவலர் நெடுஞ்செழியன் 'மன்றம்' பத்திரிக்கை நடத்துகிறார் என்ற பத்திரிகை நடத்துகிறார். என்.வி.நடராசன் 'திராவிடன்' இதழை நடத்துகிறார். சி.பி.சிற்றரசு 'போர்வாள்' என்ற பத்திரிக்கை நடத்துகிறார். இனமானப் பேராசிரியர் 'புதுவாழ்வு' என்ற பத்திரிகையை நடத்துகிறார். சத்தியவாணி முத்து அம்மையார் 'அன்னை' என்ற பத்திரிகையை நடத்துகிறார். மதியழகன் அவர்கள் 'தென்னகம்' என்ற பத்திரிகை நடத்துகிறார். இப்படி ஒவ்வொருவர் கையிலும் ஒரு பத்திரிகை, ஒரு ஆயுதம்.

இதைத்தான் இன்றைக்கு நாம் எப்படி பேஸ்புக்கிலும் ட்விட்டர்லயும் இன்ஸ்டாகிராம்லயும் யூட்யூப்லயும் சோசியல் மீடியாவிலும் கருத்துகளைப் பரப்புகிறோமோ அதுபோல அன்றைக்கு தங்கள் சொந்தக் காசைப் போட்டு பத்திரிகையை நடத்தினார்கள்.

இவர்களைத் தொடர்ந்து இன்றைய கழகத் தலைவர் அவர்கள் இளைஞர் அணியை நடத்திய பொழுது 'இளைய சூரியன்' என்கின்ற ஏட்டை அவர் தொடர்ந்து நடத்தினார். அதுவும் எப்படிப்பட்ட நேரம்? திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு சட்டமன்றத்தில் ஒரே ஒரு உறுப்பினர் இருந்த காலம். நம்முடைய குரல் மக்கள் மன்றத்தில் ஒலிக்க வேண்டும் என்பதற்காக கழகத் தலைவர் முன்னெடுத்த இதழ்தான் இளைய சூரியன்.

அந்த வழியில் இன்றைய நம் இளம் தலைவர் அவர்கள் முரசொலி பாசறை என்கின்ற அந்த பகுதியை உருவாக்கி அதில் ஒவ்வொரு நாளும் கழகத்தின் கொள்கை முழக்கத்தை முன்வைத்து அத்தனை சிறப்பான கட்டுரைகள் வரலாற்று சுவடுகளைத் தந்துகொண்டே இருக்கிறார். அதைப் புத்தகமாகவும் அச்சிட்டு முத்தமிழறிஞர் பதிப்பகம் என்ற பெயரிலே கழகத்தினருக்கு ஆயுதமாக கொடுத்துக் கொண்டிருக்கிறார்.

நாம் எதிர்க்கட்சியாக இருக்கும்பொழுது அரசாங்கத்தின் அவலங்களை; அதன் பொய் முகத்தை; அதன் ஊழல்களை வெளிக் கொண்டு வருகின்ற வேலையைச் செய்வது இந்த பத்திரிகைகள் தான். அ.தி.மு.க ஆட்சியில் திருச்செந்தூர் கோவிலிலே நடைபெற்ற கொள்ளை, அதைத் தொடர்ந்து கோயில் அதிகாரி மர்மமாக மரணமடைந்த பொழுது விசாரித்த நீதிபதி பால் கமிஷன் அறிக்கையை ஆட்சியாளர்கள் வெளிக்கொண்டு வராமல், மறைக்க முயற்சித்த நிலையில் கலைஞரும் முரசொலியும்தான் அதை வெளிக் கொண்டு வந்தார்கள்.

### அவதூறுகளைத் தகர்த்து நொறுக்கிய முரசொலி!

1991ஆம் ஆண்டு ராஜீவ் காந்தி அவர்கள் படுகொலை செய்யப்படுகிறார். அந்த படுகொலைப் பழி தி.மு.க.வின் மீது விழுகிறது. அப்படி விழுந்தபொழுது தி.மு.க.வினருடைய வீடுகள் எல்லாம் தாக்கப்பட்டன. கழகத்தினர் அப்பொழுது தேர்தல் பிரச்சாரத்திற்காக வைத்திருந்த கொடிடிகள் பேனர்கள் கட் அவுட்டுகள் எல்லாமே எரிக்கப்படுகின்றன அன்றைக்குத் தாக்கப்பட்டவர்கள் இன்றைக்கு இதே மேடையிலே தழும்புகளோடு இருக்கிறார்கள். எதிரில் இருக்கிறார்கள். அப்படி ஒரு கொலைப்பழி விழுந்த நேரத்தில் அன்றைக்கு இருந்தது கவர்னர் ஆட்சி. எப்பொழுதெல்லாம் கவர்னர் கையில் அதிகாரம் போகிறதோ அப்பொழுது நாடு எப்படி நாசமடையும் என்பதற்கு இது ஒரு உதாரணம்.

அப்போது காவல்துறையால் ஒரு படம் வெளியிடப்பட்டது. ராஜீவ் காந்தி கொலையில் மனித வெடிகுண்டாக இருந்த தணு நடுவில் இருப்பார். இரண்டு பக்கமும் இரண்டு பெண்கள் நிற்பார்கள். இந்தப் படத்தை ராஜீவ் காந்தி வருவதற்கு முன்பு காத்திருந்த படம் என்று வெளியிடுகினறன மற்ற பத்திரிகைகள்.

முரசொலி பத்திரிகை மட்டும்தான் ஓர் உண்மையைச் சொல்கிறது. கவர்னர் ஆட்சியின் போலீஸ் கொடுத்திருக்கிற படம் முழுமையான படம் இல்லை. அந்த மூன்று பெண்களுக்குப் பக்கத்திலே ஒரு ஆண் நின்று கொண்டிருக்கிறார். யார் அந்த ஆண் என்று கேட்டு ஒரு கோட் டோவியத்தையும் முரசொலியில் வரைந்து, இந்தக் கேள்வியை எழுப்பியவர்கள் கலைஞரும் அவருடைய மனசாட்சியான முரசொலி மாறன் அவர்களும்தான்.

தி.மு.க. மீது கொலைப் பழி போடப்பட்டு, ஒற்றை எம்.எல்.ஏ. மட்டுமே வெற்றி பெறும் அளவிற்கு படுதோல்வி அடைய செய்யப்பட்ட நிலை அது. ராஜீவ் படுகொலை தொடர்பாக ஜெயின் கமிஷன்விசாரணையைதி.மு.க. எதிர்கொள்கிறது. அப்படிப்பட்ட நிலையில் முரசொலி இதனை வெளியிடுகிறது. யார் அந்த நபர் என்று கேட்கிறது. இந்த கேள்வி வந்த பிறகுதான் அடுத்து ஒரு படத்தை காவல்துறையினர் வெளியிடுகிறார்கள். முழுமையான படம் வருகிறது. அந்த நபர் பெயர்தான் ஒற்றைக் கண் சிவராசன்.

இந்தக் கொலையைச் செய்வதற்குத்தூண்டுகோலாக தணு, ஒற்றைக்கண் சிவராசன், சுபா என்றெல்லாம் இருந்த அந்தக் கூட்டத்தை மறைத்து, பழியை திமுக மீது போட்டு, தேர்தலில் தோல்வியடையச் செய்து, அவலத்துக்கு ஆளாகி, ஐந்து ஆண்டு காலம் நமக்கு ஒரு மிகப்பெரிய கொடூர தண்டனை கிடைக்கக்கூடிய நிலைமைக்கு வந்த பொழுது இந்த படத்தை முரசொலி வெளியிட்டது. அதன் பிறகு தான் ராஜீவ் காந்தி படுகொலையாளிகள் யார் யார் என்பது உண்மை வெளியில் வந்தது.

### மாநில உரிமை மீட்கும் முன்கள வீரர்கள்!

ராஜீவ் காந்தி கொலை வழக்கின் குற்றப்பத்திரிக்கையில் இருந்த 40க்கும் மேற்பட்டவர்களில் ஒருவர் கூட தி.மு.க.வினர் இல்லை. அந்தக் கொலையில் கழகத்திற்கு எந்தத் தொடர்புமில்லை. ஆனால், அரசியல் எதிரிகள் கொலைப்பழியை சுமத்தினார்கள். தலைவர் கலைஞர் தன் முரசொலி மூலமாக உண்மையைக் கொண்டு வந்தார். இப்போதும் இப்படித்தான் பொய்யையும் வதந்தியையும் கொண்டு வருவார்கள். அதை முறியடிப்பதற்கு நாம் தயாராக இருக்க வேண்டும்.

நம்முடைய இளந்தலைவர் அவர்கள் இந்த மாநில உரிமை மாநாட்டில் பல தீர்மானங்களை முன்மொழிந்திருக்கிறார். தொங்கு சதையான ஆளுநரை அகற்றுவதுடன், ஆளுநர் பதவியையே ரத்து செய்ய வேண்டும் என்ற தீர்மானத்தையும், நீட் விலக்கு உள்பட என்னென்ன மாநில உரிமைகள் இருக்கிறதோ அத்தனையையும் முன்னெடுக்கின்ற முன்கள வீரர்களாக போர்க்கள வீரர்களாக சமூக வலைத்தளத்தை, வாட்ஸ் அப்பை, பேஸ்புக்கை பயன்படுத்துங்கள்.

'நாற்பதும் நமதே - நாடும் நமதே' என்ற மகத்தான வெற்றியை கழகத் தலைவரிடம் நம்முடைய இளம் தலைவர் ஒப்படைக்கத் துணை நில்லுங்கள்.

இவ்வாறு கோவி.லெனின் பேசினார்.

வலைதளங்களில் வலம் வரும் செய்தி:

# நடுநிலையாளர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்!

இந்து கோயில்களில் இந்துக்கள் அல்லாதவர்களை கொடிமரம் வரை தான் அனுமதிக்கலாம், கோயிலுக்குள் உள்ளே அனுமதிக்க கூடாது என்று மதுரை உயர்நீதிமன்றக் கிளை ஒரு தீர்ப்பை நேற்று வழங்கி இருக்கிறது.

இந்த வழக்கு பழநி கோயில் தொடர்பான ஒரு வழக்கு. பழநி முருகன் கோயிலில் இந்துக்கள் அல்லாதவர்கள் உள்ளே நுழையக் கூடாது என்று இருந்த அறிவிப்புப் பலகையை நீக்கப்பட்டதை எதிர்த்து தொடரப்பட்ட ஒரு வழக்கு.

தமிழ்நாடு அரசு சார்பில், பழநி முருகன் அனைத்து மதத்தினருக்கும் சொந்தமானவர் என்றும், அனைத்து மதத்தினரும் முருகன் வழிபாட்டை ஏற்றுக் கொண்டவர்கள் இருக்கிறார்கள் என்றும் எனவே பழநி முருகன் கோவிலுக்காவது இதிலிருந்து விதிவிலக்கு தர வேண்டும் என்றும் முன் வைத்த கோரிக்கையை நீதிமன்றம் ஏற்க மறுத்து, இது இந்துக்களுடைய உணர்வுகளைப் புண்படுத்தக் கூடியதாகும் என்று தீர்ப்பில் கூறி இருக்கிறது.

சரி, பழநி கோயிலினுடைய வரலாறு என்ன?

பழநி கோயில் சித்தர்களால் உருவாக்கப்பட்ட ஒன்று. அங்கே அர்ச்சகர்களாக இருந்தவர்கள் அனைவரும் பார்ப்பனரல்லாத பண்டாரங்கள். திருமலை நாயக்கர் மன்னர் காலத்தில், அவருடைய தளபதியாக இருந்த ஒரு பார்ப்பனர், பழநி கோயிலுக்கு வழிபட வந்தார்.

அவர் அர்ச்சகர்களாக பண்டாரங்கள் இருப்பதைப் பார்த்து, 'பண்டாரங்கள் கையில் பிரமணராகிய நான் விபூதி வாங்க மாட்டேன்' என்று கூறி மதுரைக்குச் சென்று, ஒரேநாள் இரவில் பழநி கோயில் பண்டாரங்களை நீக்கிவிட்டு, பிராமணர்கள் மட்டுமே அர்ச் சகர்களாக இருக்க வேண்டும் என்ற உத்தரவைப் பிறப்பித்தார்.

இது பழநி கோயில் ஸ்தல புராணத்தில் இப்போதும் அச்சாகிப் பதிவாகி இருக்கிற ஒரு வரலாறு.

இந்த ஆகம விதி மீறலைப் பற்றி உயர்நீதிமன்றமோ, இந்துக்கள் என்று உரிமை கொண்டாடுகின்றவர்களோ இது வரை வாய் திறக்கவில்லை.

சரி, ஆகமவிதிப்படி, கண்டிப்பாக கோயில்கள் பின்பற்றப்பட வேண்டும் என்று மதுரை உயர்நீதிமன்ற கிளை கூறுகின்றது.

ஆகமவிதிப்படி உரிய அர்ச்சகர் பயிற்சி பெற்ற, இந்துக்கள் கூட கர்ப்பகிரகத்திற்குள் நுழையக் கூடாது என்று ஆகமம் தடுப்பதாக இன்றைக்கும் ஆகம விதியைப் பின்பற்றி கொண்டிருக்கிறவர்கள் நீதிமன்றம் வரை சென்று வாதாடிக் கொண்டிருக்கிறார்கள்.

கோயிலுக்குள் இந்துக்கள் மட்டுமே நுழைய வேண்டும் என்று கூறுகின்ற அதே உயர்நீதிமன்றக் கிளை, ஆகம விதியையும் பின்பற்ற வேண்டும் என்றுகூறி இருப்பதிலிருந்து இந்துக்கள் உரிய பயிற்சி பெற்ற அர்ச்சகராக இருந்தாலும், கர்ப்பகிரகத்துக்குள் இந்துக்களே நுழையக் கூடாது என்ற கருத்தையும் சேர்த்து சொல்கிறது என்பதையும் நாம் இதில் கவனித்தாக வேண்டும்.

ஆக, இது இந்து மக்களுக்கான உரிமைக்கான தீர்ப்பா? அல்லது இந்து மக்களிடையே பார்ப்பனர்கள் தான்; பிராமணர்கள் தான் கடவுளை நெருங்கக் கூடியவர்கள் என்ற பிராமணிய மேலாண்மைக்கான தீர்ப்பா? இந்தக் கேள்விகளுக்கும் நீதிமன்றங்கள் பதில் சொல்லியாக வேண்டும்.

திருவரங்கம் கோயிலில் அரங்கநாதன் துலுக்க நாச்சியார் என்ற இஸ்லாமிய பெண் வீட்டுக்கும் போவதாக ஒரு வழிபாட்டு முறை இப்போதும் இருந்து கொண்டிருக்கிறது. அரங்கநாதன் எப்படி முஸ்லிம் பெண் வீட்டுக்குச் செல்லலாம்? அதுவும் கூடாது என்று, இதே நீதிமன்றங்கள் நாளைக்கு திருவரங்கத்தில் பின்பற்றப்படுகின்ற இந்த வழிபாட்டு முறையை தடை செய்து கூறுமா?

இப்படியே போனால் இந்து கடவுள்கள் பற்றிய வழக்கு வந்தால், அது இந்து நீதிபதிகள் தான் விசாரிக்க வேண்டும், அதுவும் அவர்கள் அசைவம் சாப்பிடாத நீதிபதிகளாக இருக்க வேண்டும் என்று நீதிமன்றங்கள் நாளைக்குத் தீர்ப்பு அளித்தாலும் அதில் ஆச்சரியப்படுவதற்கு ஏதுமில்லை.

கடவுள் இந்த உலகத்தையே படைத்தார் என்று நம்பிக்கையாளர்கள் கூறுகிறார்கள். கடவுளுக்குப் பிறகுதான் மதங்கள் வந்தன. கடவுளுக்காக மதங்கள் பல விதிகளை சம்பிரதாயங்களை ஆகமங்களை உருவாக்கிக் கொண்டன.

கடவுள் முதலில் தோன்றினாரா? மதம் முதலில் தோன்றியதா? கடவுள் உருவாக்காத மதத்தில் கடவுளுக்காக உருவாக்கப்பட்ட மதத்திற்குள் கடவுளை இழுத்துக் கொண்டு வந்து திணித்து, மனிதன் உருவாக்கிய மதத்துக்குள் சர்வ சக்தி உள்ள கடவுளே அடங்கி நடக்க வேண்டும் என்று கூறுவார்களே என்று சொன்னால், கடவுள் சக்தியையே இவர்கள் கேள்விக்குள்ளாக்குகிறார்கள் என்ற கேள்வியை பகுத்தறிவாளர்கள், சிந்தனையாளர்கள் எழுப்பத்தான் செய்வார்கள்.

தீண்டாமை என்பதை ஒவ்வொரு கட்டத்திலும் சனாதன தர்மம், இந்து தர்மம் என்பது வலியுறுத்திக் கொண்டே இருக்கிறது.

கோயில் கர்ப்பக்கிரகத்தில் தீண்டாமை. முதலில் கோயில் நுழைவுக்கே தீண்டாமை. கோயில் கோபுரம் வைக்கப்பட்டதே, கோயிலுக்குள் நுழைய முடியாத மக்கள் தெரு முனையில் இருந்து கோயில் கோபுரச் சிலைகளை கும்பிட்டுச் செல்ல வேண்டும் என்பதற் காகத்தான் கோபுரங்களையே வடிவமைத்து 'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்' என்று சொல்லி வைத்தார்கள்.

ஆக, இன்னும் நீதிபதி; சைவம் சாப்பிடுபவர்கள் தான் இந்து மதத்தின் தர்மம், அசைவம் சாப்பிடுவது இந்து தர்மத்திற்கு எதிரானது என்கிற கருத்தையும் கூறி இருக்கிறார்.

இந்து மதத்தில் பெரும்பான்மையான மக்கள் அசைவம் சாப்பிடக் கூடியவர்கள். அவர்கள் எல்லாம் இந்துக்கள் அல்ல என்று அறிவிக்கக் கூடிய ஒரு நிலைக்குக் கூட நாளைக்கு நீதிமன்றங்கள் சொன்னால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஆக, இன்றைக்கு இந்து தர்மம் என்ற பெயரால் வேத தர்மம் பார்ப்பனீய தர்மம். ஏன் என்றால் மதங்களை வெறுக்கின்ற தர்மம். தீண்டாமையை மறைமுகமாக அனுசரிக்கின்ற தர்மம் தான் இன்றைக்கு நீதிமன்றங்களா லும் முன்மொழியப்படுகின்றது என்பதை நடுநிலை யாளர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.!



விடுதலை ராசேந்திரன்
( பொதுச் செயலாளர்
திராவிடர் விடுதலைக் கழகம் )



ஆர்.கே.பேட்டை ஒன்றியத்திற்குட்பட்ட பகுதியில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பள்ளி மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கினார். உடன் ஒன்றிய கழகச் செயலாளர் பெ.பழனி, சி.என்.சண்முகம் கே.எம்.சுப்பிரமணி, ரஞ்சிதா, ஆபாவாணன், திலகவதி ரமேஷ், ஆனந்தி செங்குட்டுவன், தலைமை ஆசிரியர், பள்ளி ஆசிரியர்கள் அரசு அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.



பெருநகர சென்னை மாநகராட்சியின் மாமன்றக் கூட்டம் மேயர் ஆர்.பிரியா தலைமையில் நேற்று (31.01.2024) ரிப்பன் கட்டட மாமன்றக் கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், நிலைக்குழுத் தலைவர்கள், மண்டலக் குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.